# அழகியல் பாடத்திற்கான பாடசாலைக் கலைத்திட்டமும் கற்றல் கற்பித்தலில் எதிர்கொள்ளும் சவால்களும் தீர்வுகளும்

(மமே / ம.தெ.மே பட்டிப்பளை கோட்ட இடைநிலைப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
23 APR 2018
Vantharumoolai
Chenkalady

பெயர் : திரு. விசுமாப்போடி சசிகரன்

பதிவு இலக்கம் : EU/1S/2011/AC/403

சுட்டெண் : CS4703

LIBRARY
22 JUN 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

இந்த ஆய்வுக் கட்டுரையானது இளங் கலைமாணி சிறப்புக் கற்கை நெறியின் இறுதி வருட பரீட்சையின் ஓர் அங்கமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

FAC544
Project Report
Library - EUSL

நுண்கலைத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

2018

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வுச் சுருக்கம்

மாணவர்களது பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியல் பாட செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதே ஆய்வின் பிரதான அம்சமாகும். அழகியல் பாடங்கள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் முக்கியமான ஒன்றாகும். இப் பாடங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்துதான் இடைநிலைக் கலைத்திட்டத்திலிருந்தே இப் பாடங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இப் பாடங்களை பாடசாலைகளில் முறையாக நடைமுறைப்படுத்தும் போதுதான் மாணவர்கள் மத்தியில் அழகியல் உணர்வு மற்றும் விழுமியம், ஆளுமை பண்புகள் விருத்தியாவதுடன் க.பொ.த. (உ/த) கற்பதற்கான ஒரு பாடச் சித்தியினையும் பெறறுக் கொடுப்பதாகவும் அமைகின்றது. க.பொ.த. (சா/த) தரத்தில் ஏனைய பாடங்களில் ஓரளவு சித்தி பெற்று இப்பாடம் சித்தி பெறாமையினால் சில மாணவர்கள் க.பொ.த. (உ/த) கற்கக்கூட தகுதியடையாக நிலையும் மாணவர் மத்தியில் காணப்படுகிறது. எனவே பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியல் பாடங்கள் மீதான பங்குபற்றலையும் ஆர்வத்தையும் அதிகரிக்கச் செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

இன்று உலகமயமாதல் போன்ற கருத்தியல்களின் பின்னணியில், பிள்ளைகளின் வாழ்வியல அமைப்பில் அளவுக்கதிகமான புறவினைகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. போட்டி மிகுந்த வாழ்வியல் சூழலை ஒவ்வொரு பிள்ளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. போட்டி மிகுந்த சூழலுக்கு ஈடுகொடுத்து வாழக்கூடிய சமூகத் திறன்களையும் ஆளுமை மற்றும் அழகியல் திறன்களை மாணவரிடத்தே கட்டியெழுப்ப வேண்டிய கடைப்பாடும் பாடசாலைகளுக்கு உள்ளது.

எனினும் இத்தகைய திறன்களை வெறுமனே மாணவர்களுக்கு புத்தகத்தோடு மாத்திரமின்றி அவர்களுக்கு மேலாக செயற்பாடு மற்றும் பிரயோக ரீதியான ஆக்கதிறன் செயற்பாடுகளும் அவசியமாகின்றது. இவற்றினை முறையாகச் செயறபடுத்தும் போது ஆக்கத்திறன் மற்றும் உடலியக்கத்திறன் என்பவற்றை வெளிப்படுத்துகை மேம்படுத்த முடியும். இதனூடாக இத்துறைசார் பாடங்களில் கூடிய அடைவு மட்டத்தினையும் விருத்தி செய்யவும் முடியும்.

இருப்பினும் பெரும்பாலான பாடசாலைகளில் அழகியல்பாடச் செயற்பாடு குறைவாகக் காணப்படல், அதற்கான தடைகள், இப்பாடங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஆளணிப்பற்றாக்குறை, உபகரண பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை போன்ற காரணிகள் காணப்படுகின்ற நிலையில் மாணவர்கள் மத்தியில் அழகியல்சார் திறன்கள் முறையாக விருத்தியடையாத நிலையும் காணப்படும் அதேவேளை பாடசாலைகளும் இவ்வளங்களைப் பெற தவறுகின்ற நிலையும் காணப்படுகின்றன. ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பட்டிப்பளைக்

கோட்டத்தில் 21 பாடசாலைகள் காணப்படுகின்றன. அவற்றில் 1AB பாடசாலை, 2ம், 1C பாடசாலைகள் 4 உம், Type-II பாடசாலைகள், Type-III பாடசாலைகள் 9 உம் உள்ளன. அவற்றில் இடைநிலை பாடசாலைகளே ஆய்வாளரின் ஆய்வில் இடம்பெறுவதனால் அக் கோட்டத்தில உள்ள பாடசாலைகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் அனைத்து இடைநிலை பாடசாலைகளும் ஆய்வாளரால் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அழகியல் பாடக்கலைத்திட்டத்தின் செயற்பாட்டை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக பெறப்பட்ட அளவு, பண்பு ரீதியான பகுப்பாய்வில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு எண்சார் தகவல்களாக மாற்றப்பட்டு அட்டவணையாக்கம் இருபரிமாண, முப்பரிமாண வரைபடங்கள், சலாகை வரைபுகள், வட்ட வரைபுகள் மூலமாக புள்ளி விபரமாக்கப்பட்டு விளக்கப்படுகின்றது. பண்பு ரீதியான பகுப்பாய்வில் மனப்பாங்கு சார்பான விபரங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. இதற்காக Microsoft Excel எனும் முறை பயன்படுத்தப்பட்டு இலக்கிய மீளாய்வில் பெறப்பட்ட விடயங்களுடன் வியாக்கியானமும் கலந்துரையாடலும் இடம்பெற்றுள்ளது.

பாடசாலைகளில் அழகியல்சார் பாடங்கள் முறையாக கற்பிக்கப்படாமையினாலும் அனைத்து பாடங்களும் உள்வாங்கப்படாமையினாலும் அழகியல் சார், ஆளுமைசார் ஆற்றல்களும் பண்புகளும் குறைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. பெற்றோர்கள் மத்தியிலும் பாடசாலைகள் மத்தியிலும் அழகியல் பாடங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் குறைந்து இருக்கிறது. பாடசாலைகளில் ஆளணி பற்றாக்குறை பௌதீகவளப் பற்றாக்குறை கல்வியில் நாட்டமற்ற பெற்றோர்கள், அழகியல் பாடங்களில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் இன்மை காரணமாக அழகியல் பாடங்கள் அனைத்தும் மாணவர்களுக்கு முழுமையாக சென்றடையவில்லை. கலைகளை உருவாக்கின்ற கலைகளை படைப்புருவாக்கம் செய்கின்ற பல மாணவர்கள் பாடசாலைகளில் மழுங்கடிக்கப்படுகின்றனர்.

எனவே அழகியல்சார் கலைத்திட்டங்களை வினைத்திறன் உடையதாக மாற்றும்போது மாணவர் மத்தியில் கூட்டுப்பொறுப்பு, தலைமைத்துவம், சிந்திக்கும் ஆற்றல், மனப்பாங்கு மாற்றம், சமூகத்துடன் ஒன்றிணைந்து செயற்படல், தீய செயல்களில் ஈடுபடாமை, சமூகவிரோத செயல்களில் ஈடுபடாமை போன்ற விழுமியம்சார் பண்புகளையும் தொழில்சார் விருத்தியினையும் அதிகரிக்க முடியும் என முடிவுகள் பெறப்பட்டு அவற்றுக்குரிய விதந்துரைப்புகளும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- ஆய்வாளன் -

# பொருளடக்கம்

| விடயம் | பக்கம் |
|---|---|
| ஆய்வுச் சுருக்கம் | I |
| பொருளடக்கம் | III |
| அட்டவணை விபரம் | VIII |
| உருக்கள் விபரம் | IX |

## அத்தியாயம் - ஒன்று

| விடயம் | பக்கம் |
|---|---|
| 1.0 அறிமுகம் | 1 |
| 1.1 ஆய்வின் அறிமுகம் | 1 |
| 1.2 ஆய்வுப் பிரச்சினை | 2 |
| 1.3 ஆய்வுப் பின்னணி | 2 |
| 1.4 ஆய்வுக்கான நியாயம் | 3 |
| 1.5 ஆய்வு நோக்கம் | 4 |
| 1.6 ஆய்வின் முக்கியத்துவம் | 5 |
| 1.7 அருஞ்சொற்பதங்கள் | 6 |
| 1.7.1 அழகியல் பற்றிய அறிமுகம் | 6 |
| 1.7.2 பாடசாலைக் கலைத்திட்டம் | 7 |
| 1.7.3 பட்டிப்பளைக் கல்விக்கோட்டம் | 8 |

# அத்தியாயம் - இரண்டு

| விடயம் | பக்கம் |
|---|---|
| 2.0 இலக்கிய மீளாய்வு | 9 |
| 2.1 அறிமுகம் | 9 |
| 2.2 அழகியல் பற்றிய எண்ணக்கரு விளக்கம் | 10 |
| 2.3 அழகியல் பெறுமானங்கள் | 12 |
| 2.4 பாடசாலைகளில் கலைத்திட்டம் | 13 |
| 2.5 பாடசாலைகளில் அழகியல் கலைத்திட்டம் | 14 |
| 2.6 கலைத்திட்டத்தினை சமநிலைப்படுத்துவதில் அழகியல் கல்வி | 17 |
| 2.7 பாடசாலைகளில் கற்றல் , கற்பித்தல் | 20 |
| 2.7.1 கட்டுருவாக்க மாதிரி | 22 |
| 2.7.2 உளவியலாளர்கள் கண்டறிந்த 7 வகை கற்றல் பாணிகள் | 23 |
| 2.7.3 பாடசாலையில் வளங்களை ஒழுங்கமைத்தல் | 25 |
| 2.7.4 வளங்களை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் சவால்கள் | 27 |
| 2.7.5 வளம் குன்றிய பாடசாலைகளும் வளம் மிக்க பாடசாலைகளும் | 28 |
| 2.7.6 கஸ்டப் பிரதேசத்தில் காணப்படும் வளப்பற்றாக்குறை | 28 |
| 2.7.7 வளங்களைப் பெறுவதில் அதிபரின் பங்கு | 29 |
| 2.8 அழகியல் கல்வி தொடர்பான முன்னர் செய்யப்பட்ட ஆய்வு முடிவுகளும் கருத்துக்களும் | 32 |

## அத்தியாயம் - மூன்று


| விடயம் | பக்கம் |
|---|---|
| 3.0 ஆய்வு முறையியல் | 35 |
| 3.1 அறிமுகம் | 35 |
| 3.2 ஆய்வின் பொது நோக்கமும் சிறப்பு நோக்கமும் | 36 |
| 3.2.1 பொது நோக்கம் | 36 |
| 3.2.2 சிறப்பு நோக்கம் | 36 |
| 3.3 ஆய்வுப் பிரதேசம் | 36 |
| 3.4 ஆய்வின் சனத்தொகை | 38 |
| 3.5 மாதிரித் தெரிவு | 39 |
| 3.6 ஆய்வுக்கருவிகள் | 41 |
| 3.6.1 வினாக்கொத்து | 42 |
| 3.6.2 நேர்காணல் | 42 |
| 3.6.3 ஆவணங்கள் | 43 |
| 3.7 ஆய்வுக் கருவிகளின் நம்பகமும் தகுதியும் | 43 |
| 3.8 தரவுகளின் பகுப்பாய்வு | 45 |

## அத்தியாயம் - நான்கு


| விடயம் | பக்கம் |
|---|---|
| 4.0 தரவுகளின் பகுப்பாய்வும் வியாக்கியானமும் | 47 |
| 4.1 அறிமுகம் | 47 |
| 4.2 பாடசாலைகளில் காணப்படும் அழகியற்பாட செயற்பாடுகள் | 48 |
| 4.2.1 பாடசாலை அழகியற் பாடங்கள் | 48 |
| 4.2.2 பாடசாலை அழகியற் பாடங்களின் திருப்தி | 51 |
| 4.3 பாடசாலையில் அழகியற் பாடங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் | 57 |
| 4.3.1 விரும்பிய அழகியற் பாடங்களைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் | 57 |
| 4.3.2 விரும்பிய அழகியற் பாடங்களை கற்பதற்கான வளங்கள் | 60 |
| 4.4 பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியல் பாடத்தினை மேம்படுத்தும் வழிமுறைகளைக் கண்டறிதல் | 65 |
| 4.4.1 பாடசாலைகளில் அழகியற் பாட கலைத்திட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படல் | 65 |
| 4.4.2 அழகியல் பாடங்களை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் | 68 |
| 4.5 பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியற் பாடங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் | 70 |
| 4.5.1 ஏனைய பாடக்கலைத்திட்டத்திற்கு கொடுக்கப்படும் முதன்மை நிலை அழகியல் கலைத்திட்டத்திற்கு வழங்கப்படல் | 70 |
| 4.5.2 அழகியல் சார் பாடங்களுக்கு பிரயோக ரீதியான செயற்பாடுகள் நடைமுறை குறைவு | 72 |

## அத்தியாயம் - ஐந்து


| விடயம் | பக்கம் |
|---|---|
| 5.0 முடிவுகளும் விதந்துரைப்புக்களும் | 75 |
| 5.1 அறிமுகம் | 75 |
| 5.2 பாடசாலைகளில் காணப்படும் அழகியற் பாடங்கள் | 76 |
| 5.2.1 பாடசாலை அழகியல் பாடங்கள் | 76 |
| 5.2.2 பாடசாலை அழகியற் பாடங்களின் திருப்தி | 77 |
| 5.3 அழகியல் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் | 78 |
| 5.3.1 விரும்பிய அழகியற் பாடங்களை கற்பதற்கான செயற்பாடுகள் | 78 |
| 5.3.2 அழகியற் பாடத்துக்கு தடையாக உள்ள காரணிகள் | 79 |
| 5.4 பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியல் பாடங்களை மேம்படுத்தும் வழிமுறைகளைக் கண்டறிதல் | 80 |
| 5.4.1 பாடசாலைகளில் அழகியற்பாட கலைத்திட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தல | 80 |
| 5.4.2 அழகியற் பாடங்களை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் | 81 |
| 5.5 பாடசாலைக் கலைத்திட்டத்தில் அழகியற் பாடங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்மொழிதல் | 83 |
| 5.5.1 ஏனைய பாடக்கலைத்திட்டங்களுக்கு கொடுக்கப்படும் முன்னுரிமை அழகியற் கலைத்திட்டத்திற்கு வழங்கப்படல் | 83 |
| 5.5.2 அழகியல் சார் பாடங்களுக்கு பிரயோக ரீதியான செயற்பாடுகள் | 84 |
| 5.6 ஆய்வின் வரையறை | 85 |
| 5.7 ஆய்வு முடிவுகளின் பிரயோகங்கள் | 86 |
| முடிவுரை | 87 |
| உசாத்துணை நூல்கள் | 89 |